


**10. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் துறையினரின் பங்கு இன்றியமையாதது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.
2. தி.மு.க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் சென்னையில் மெட்ரோ ரயில் பயணிகளிடையே தி.மு.க. வேட்பாளர்களுக்கு இன்று ஆதரவு திரட்டினார்.
3. தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.
4. சாதிவாரி கணக்கெடுப்பு பணிகளை நிறுத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.
5. சீனாவில் நடைபெறும் ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு ஆயுஷ் ஷெட்டி முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் துறையினரின் பங்கு இன்றியமையாதது என்று மத்திய வர்த்தக

தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

கோவை, திருப்பூர் மற்றும் மேற்கு மண்டல தொழில் துறையினருடன் இன்று கோவையில் கலந்துரையாடிய அமைச்சர், தொழில் துறை வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதாகவும், இளைஞர்கள் ஸ்டார்ட் அப் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோராக உருவாகி வருவதாகவும் கூறினார்.

தொழில்களை விரிவுப்படுத்த சரியான அரசை தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் – பிரச்சாரம்

தமிழ்நாட்டில் 234 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக வரும் 23-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

தி.மு.க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் செய்து தி.மு.க. அரசின் திட்டங்கள் குறித்து பயணிகளிடையே எடுத்துரைத்து, வாக்கு சேகரித்தார்.

தஞ்சாவூரில் இன்று மாலை பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

கோவை வடக்கு தொகுதியில் போட்டியிடும் பி.ஜே.பி. வேட்பாளர் திருமதி. வானதி சீனிவாசனை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. பியூஷ்கோயல், தமிழகம் பொருளாதாரத்தில் சிறந்த மாநிலம் என்றாலும், கடந்த 5 ஆண்டுகாலத்தில் எந்த வளர்ச்சியும் ஏற்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

மத்திய அரசு தமிழகத்திற்கு நிதி ஒதுக்கிய போதிலும் உரிய ஆவணங்களை தராமல் திட்டங்களுக்கு தி.மு.க. முட்டுக்கட்டை போட்டதாக அவர் கூறினார்.

சென்னையில் பிரச்சாரம் மேற்கொண்ட அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, தி.மு.க. ஆட்சியில் கட்டுமானப் பொருட்களின் விலை பெருமளவு உயர்ந்ததாக குறை கூறினார்.

இன்று பிற்பகல் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் பிரச்சாரம் மேற்கொண்ட பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், சாத்தூரின் தொழில் வளர்ச்சிக்காக செயலாற்றுவதோடு, வைப்பாற்றில் கருவேல மரங்களை அகற்றி கழிவுநீர் கலக்காமல் ஆற்றை சுத்தம் செய்து நிலத்தடி நீரை மேம்படுத்தி குடிநீர் பிரச்சனை தீர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

பெரம்பலூர் மாவட்டம் அகரம் சீகூர் பகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய ஜனநாயக கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட அக்கட்சியின் நிறுவனர் திரு. பாரிவேந்தர், வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க. அரசு அகற்றப்பட வேண்டுமென்றார்.

கோவில்பட்டியில் இன்று பிரச்சாரம் மேற்கொண்ட நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் இலவசங்களை முன்னிறுத்தி தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. கட்சிகள் தேர்தலை சந்திப்பதாக குற்றம் சாட்டினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் த.வெ.க. தலைவர் திரு. விஜய் தற்போது பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் திரு. தங்கம் தென்னரசு விருதுநகரிலும்,

ராணிப்பேட்டையில் திரு. ஆர். காந்தியும் தீவிர வாக்குச் சேகரிப்பில் இன்று ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

இந்நிலையில் தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வாக்காளர்களின் இல்லங்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணிகளை வரும் 17-ம் தேதிக்குள் முடிக்க மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் அறிவுறுத்தியுள்ளார்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களை அச்சிடும் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலம் முழுவதும் நியமிக்கப்பட்டுள்ள 151 செலவினப் பார்வையாளர்கள், வேட்பாளர்களின் பிரச்சார செலவினங்களை கண்காணிக்கும் பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

விருத்தாச்சலம் சட்டமன்ற தொகுதிக்கு கணினி மூலம் கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீட்டுப் பணிகள், மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சிபி. ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் பிரநிதிகள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

.. தேர்தல் களம் ..

MUSIC

..

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட

சட்டப்பேரவை தொகுதிகள் குறித்த

தேர்தல் கண்ணோட்டம் இன்று இடம்பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் மாவட்டங்கள்

சட்டப்பேரவை தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

கோவையில் பொள்ளாச்சி மத்திய பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பலூனை மாவட்ட கூடுதல் ஆட்சியர் திரு. சங்கேத் இன்று பறக்கவிட்டார்.

உருமி இசை முழங்க மலைவாழ் மக்கள் பாரம்பரிய நடனமாடி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியதையும் பார்வையிட்டார்.

வருவாய்த்துறை ஊழியர்கள் இருசக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்ற இருசக்கர வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ரத்தினசாமி இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

கணக்கெடுப்பு

2027-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாட்டில் முதன்முறையாக மின்னனு மூலம் 5 லட்சத்து 72 ஆயிரம் வீடுகளின் விவரங்கள் டிஜிட்டல் முறையில் பெறப்பட்டுள்ளதாக மத்திய தலைமை மக்கள் தொகை பதிவாளர் தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் சார்ந்த மின்னனு கணக்கெடுப்பில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக அவர் கூறினார்.

கடந்த ஒன்றாம் தொடங்கிய இப்பணிகளில் சுய கணக்கீடுகள் வரும் 15-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வீடுகள் கணக்கெடுக்கும் பணிகள் வரும் 16-ம் தேதி தொடங்கி ஒருமாத காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

இதில் கட்டடங்கள், வீடுகளின் நிலைமை, அங்குள்ள வசதிகள், சொத்து விவரங்கள் கணக்கில் கொள்ளப்படும்.

இதனிடையே சாதிவாரி கணக்கெடுப்பு பணிகளை மத்திய அரசு நிறுத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

❖❖❖❖❖❖❖❖❖

விக்ரம் மிஸ்ரி

மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, அமெரிக்க வெளியுறவு செயலர் மார்க்கோ ரூபியோவை இன்று வாஷிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

வர்த்தகம், அரிய தாதுப்பொருட்கள், பாதுகாப்பு, குவாட் கூட்டம் உள்ளிட்டவை குறித்த பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெற்றதாக இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் ஸெர்ஜியோ கர் கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில் அமெரிக்காவின் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா ஆவலுடன் உள்ளதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மார்க்கோ ரூபியோ அடுத்த மாதம் இந்தியாவிற்கு வருகை தரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மொரீஷியஸ் தலைநகர், போர்ட் லூயியில் 9-வது இந்திய பெருங்கடல் மாநாட்டில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று பங்கேற்கிறார்.

இதனொரு பகுதியாக பிற நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார்.

முன்னதாக மொரீஷியஸ் பிரதமர் நவீன் ராம்கூலமை டாக்டர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஹோமியோபதி

உலக ஹோமியோபதி தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

ஹோமியோபதியின் தந்தை என போற்றப்படும் டாக்டர் சாமுவேல் ஹானிமன் பிறந்தநாளை நினைவுக் கூறப்படும் வகையில் இத்தினம் கொண்டாடப் படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் 2 நாள் கருத்தரங்கிற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

தமிழ்நாட்டில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் அடுத்த 6 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

சீனாவில் நடைபெறும் ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர், இந்தோனேஷியாவின் ஜொனட்டான் கிறிஸ்டியை 23-21, 21-17 என்ற நேர் செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

மேட்ரிட் சர்வதேச சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் சித்தார்த் பாந்தியா, பல்கேரியாவின் அலெக்ஸாண்டர் இணை – செக் குடியரசு இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் குஹாட்டியில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் – ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை நிறைவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖

பொதுத்தேர்வு

தமிழ்நாட்டில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்றுமுதல் தொடங்கியது.

தேர்வுத்துறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இப்பணிகளை முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் போது கவனமாக ஆய்வு செய்து கையொப்பமிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜுலை 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெறும் ஆசிரியர் தகுதித் தேர்விற்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.